மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)
மதுரை - 625021



சமயங்கள், தத்துவம் மற்றும் மனிதநேயச் சிந்தனைப்புலம்

UGC-DRS-SAP (Phase-III)

**பல்சமய ஆய்வாளர் மன்றம்**
நடத்தும்
**பன்னாட்டுக் கருத்தரங்கம்**

## சமய இலக்கியங்களும் அறவியல் கருத்தாக்கங்களும்

International Seminar
on

## Religious Literatures and Ethical Concepts

**அறிவும் அறமும்**

**நிகழிடம்**
சமயங்கள், தத்துவம் மற்றும் மனிதநேயச் சிந்தனைப்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 21

**நாள்** : 25.02.2020

**கருத்தரங்க நெறியாளர்**
முனைவர் ஏ.இரவிக்குமார்
உதவிப்பேராசிரியர் மற்றும் தலைவர் (பொ),
சைவ சித்தாந்தத் தத்தவத்துறை
சமயங்கள், தத்துவம் மற்றும் மனிதநேயச் சிந்தனைப்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 625 021

நூல் அஞ்சல்

**சமய இலக்கியங்களும் அறவியல் கருத்தாக்கங்களும்**
பன்னாட்டுக் கருத்தரங்கம்-2020

பெறுநர்
திரு/திருமிகு/ முனைவர்...........................

அனுப்புநர்
செயலாளர்
பல்சமய ஆய்வாளர் மன்றம்
சமயங்கள், தத்துவம் மற்றும் மனிதநேயச் சிந்தனைப்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 625 021

## பதிவுப் படிவம்

பெயர் :

✓ முனைவர் /ஆய்வாளர் /பேராசிரியர் /ஆசிரியர் / நிறுவனம்

தொடர்பு முகவரி :

அலைபேசி எண் :

மின்னஞ்சல் :

வங்கியின் பெயர் :

வரைவோலை எண்/ நாள் :

கட்டுரைத் தலைப்பு :

நாள் :

இடம் :

கையொப்பம்

**கட்டுரை வந்து சேர வேண்டிய இறுதி நாள்**
**05.02.2020**

இதனை நகல் எடுத்தும் பயன்படுத்தலாம்.

**அன்புடையீர் வணக்கம்.**

பல்சமய ஆய்வாளர் மன்றம், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் சமயங்கள், தத்துவம் மற்றும் மனிதநேயச் சிந்தனைப்புலத்தில் இயங்கி வருகின்றது. வாரந்தோறும் இம்மன்றத்தில் ஆய்வாளர்கள் ஆய்வுக் கட்டுரைகளை வாசித்தளித்து வருகின்றனர். ஆண்டு இறுதியில் ஒரு பன்னாட்டுக் கருத்தரங்கினை அவ்வக்காலச் சூழலுக்கு இயைந்தவாறு குறிப்பிட்ட பொருண்மையில் இம்மன்றம் நடத்தி வருகின்றது. கருத்தரங்கிற்காகப் பெறப்படும் ஆய்வுக்கட்டுரைகள் தொகுக்கப்பட்டு ISBN குறியீட்டுடன் கருத்தரங்கில் வெளியிடப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு (2020) "சமய இலக்கியங்களும் அறவியல் கருத்தாக்கங்களும்" என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கு ஒன்றினை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பன்னாட்டுக் கருத்தரங்கிற்கு ஆய்வாளர்கள், பேராசிரியர்கள், ஆர்வலர்கள் கட்டுரை வழங்கி, கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**கருத்தரங்கின் நோக்கம்**

மனிதர்கள் இயற்கையின் மீதான அச்சத்தையும் இயற்கையின் புதிர்களையும் இறைவனின் செயல் எனக் கருதிக் கொண்டனர். அதன் விளைவாகவே இறைவனைப் பற்றிய சிந்தனைகளும், கருத்தியல்களும் உருவாக்கம் பெற்றன. காலப்போக்கில் மனித நடத்தைகளையும் செயல்பாடுகளையும் கட்டுப்படுத்தும் அறங்களைக் கூறுவனவாகவும் சமயங்கள் மாற்றம் பெற்றன. கடவுள் சாராத அறக் கருத்துக்களையும் இந்தியச் சமய வரலாற்றில் காணமுடியும். சமயங்களின் தோற்றம், அதன் பரிணாமம், பரிமாணங்கள் இவை பற்றிய சிந்தனைகளே சமயங்களின் அடையாளங்களாகவும் மாற்றம் பெற்றன.

சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளில் அறங்கள் மனிதர்களின் நடத்தைகள் குறித்தவை. அறக் கருத்தியல்கள் காலந்தோறும் மாறுதல்களுக்கு உட்பட்டும், சமூகத்தின் நிலைமைகளுக்கு இயைந்தவாறும் கடைபிடிக்கப்படுகின்றன. சமயங்களும் அறங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகும். மனிதர்களின் நடத்தைகளை நன்மை, தீமை என்றும், ஏற்புடையன, ஏற்புடைமையற்றன என்றும் கூறுவனவாகச் சமயச் சிந்தனைகள் காணப்படுகின்றன. அவையே அற நடத்தைகளாகவும் காணப்படுகின்றன. மனிதர்கள் தம் வாழ்வியலை அறங்கள் சார்ந்து கட்டமைக்கின்றனர். அறங்கள் சமூகத்தால் வலியுறுத்தப்படுவதாகவும், சமூக நிறுவனங்களால் கற்றுக் கொடுக்கப்படுவனவாகவும் காணப்படுகின்றன.

இன்றைய சமூகத்தில் சமயங்கள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகி வருகின்றன. சமயவாதிகளின் ஆதிக்கம் பிற சமயக் காழ்ப்புணர்வுகளுக்குக் காரணமாகின்றன. அறப்பெறுமானங்களும் வீழ்ச்சியடைந்து வருகின்றன. தமிழின் அற இலக்கியங்கள் உலகோர் கடைபிடிக்கத் தக்க அறங்களை பறைசாற்றுகின்றன. ஆயினும் அறத்தின் வீழ்ச்சி இன்று மிகுந்து காணப்படுகின்றது. சமயங்களும் அறக்கருத்தியல்களும் மனிதர்களுக்கு படைத்துக் காட்டிய பன்னெடுங்கால விழுமியங்களை மீட்கப்படவேண்டும் என்ற நோக்கில் இக்கருத்தரங்கு இப்பொருண்மையை கைக்கொள்கிறது.

**கருத்தரங்கப் பொருண்மைகள்**

கருத்தரங்கிற்கு கட்டுரையாளர்கள், சமயங்கள், சமய இலக்கியங்கள், அறவியல் சிந்தனைகள், அறக்கருத்தாக்கங்கள், அற இலக்கியங்கள், இலக்கியங்களில் அறங்கள் போன்ற களங்களில் கட்டுரைகள் வழங்கலாம்.

| | | |
|---|---|---|
| மு.சாரதா | தலைவர் | 6374159672 |
| க.அன்பரசு | செயலாளர் | 9578423767 |
| நா.அன்பு | பொருளாளர் | 9655420368 |
| பி.பிரிஜிலா ராஜம் | துணைச்செயலாளர் | 9486556516 |

**கட்டுரையாளர்களின் கவனத்திற்கு**

- *கட்டுரைகளில் காணப்படும் கருத்துக்களுக்குக் கட்டுரையாளர்களே பொறுப்பாவர்*
- *கட்டுரைகளைச் செம்மைப்படுத்தவும் சுருக்கவும் நீக்கவும் ஆய்வாளர் மன்றப் பதிப்புக்குழுவிற்கு உரிமை உண்டு.*
- *கட்டுரையாளர்கள் தங்களின் கட்டுரையைத் தவறாமல் வாசித்தளிக்க வேண்டும்*
- *ஒரு கட்டுரைக்கு ஒருவர் பெயர் மட்டுமே எடுத்துக்கொள்ளப்படும்.*
- *கருத்தரங்க நாளன்று தேநீர், மதிய உணவு வழங்கப்படும்.*

**கட்டுரைகளை அனுப்பும் முறை**

- *கட்டுரைகள் சொந்தப் படைப்பாகத்* **தலைப்பிற்குப் பொருந்துமாறு** *அமைதல் வேண்டும்.*
- *பிழைகள் இன்றி உரிய ஆய்வு நெறிமுறைகளின்படி எழுதப்பட்டு உரிய காலத்திற்குள் கிடைக்கப் பெற வேண்டும்.*
- *கட்டுரையின் தலைப்பின் கீழ் பெயர், முகவரி அலைபேசி எண், மின்னஞ்சல் முதலியவற்றைக் குறிப்பிட வேண்டும்.*
- *கட்டுரைகள் தமிழில் பாமினி (Bamini) Tam Elango, Unicode ஆகிய எழுத்துருக்களில் அமையப் பெறலாம். ஆங்கிலக் கட்டுரைகள் Times New roman எழுத்துருவில் அமைதல் வேண்டும்.*
- *கட்டுரைகள் M.S Word இல் தட்டச்சுச் செய்து அனுப்பப்பட வேண்டும்.*
- *கட்டுரைகள் A4 தாளில் 1.5 இடைவெளியில் 12 Size எழுத்துருவில் 5 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். Unicode எழுத்துருவில் 9 Size எழுத்துருவில் அமையலாம்.*
- *கட்டுரையோடு பூர்த்தி செய்த பதிவுப் படிவத்தையும் கட்டணத்திற்கான வரைவோலையையும், வங்கி ஒப்புகைச் சீட்டு ஆகியனவற்றையும் இணைத்துக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.*
- *கட்டுரையாளர்கள் கட்டணம் செலுத்திய பின்னரே கட்டுரை நூலில் சேர்க்கப்படும்.*


**செயலாளர்**
**பல்சமய ஆய்வாளர் மன்றம்**
**சமயங்கள், தத்துவம் மற்றும்**
**மனிதநேயச் சிந்தனைப்புலம்**
**மதுரை காமராசர் பல்கலைக்கழகம்**
**மதுரை – 21**

**கட்டுரைகள் அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி**
srphtirsf2019@gmail.com


*கட்டுரை கிடைக்கப் பெற வேண்டிய கடைசி நாள்*
*பிப்ரவரி 05, 2020*

**பேராளர் கட்டணம்**

| | |
|---|---|
| ஆய்வாளர் | :700 |
| பேராசிரியர்/மேலாய்வாளர்/ஆர்வலர் | :1000 |
| வெளிநாட்டுக் கட்டுரையாளர் | : 50 (USD) |

*கட்டணம் செலுத்தும் முறை*

Demand draft - in favor of
Inter-religious Scholars Forum
Payable at Madurai

**கட்டணத்தை**
SBI Account No : 30605202827,
IFSC code: SBIN0002235
**என்னும் கணக்கு எண்ணிலும் செலுத்தலாம்**
**செலுத்தியதற்கான ரசீதைக் கட்டுரையுடன் இணைத்து அனுப்ப வேண்டும்**

DD**பின்புறம் கட்டுரையாளர் தங்களின் பெயர் மற்றும் முகவரியைக் குறிப்பிட வேண்டும்**